# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
கார்த்திகை 27
முஹறம் 12
புதன் (13-12-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 56
விலை சதம் 35


# எதிர்க்கட்சித் தலைவரின் மட்டக்களப்பு விஜயம் இருட்டடிப்பு!

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பாரபட்சம்!

கிழக்கு மாகாணத்தில் சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அளிக்கப்படும் நிவாரண வேலைகளைப்பார்வையிடவும், மக்களின் பிரச்சினைகளை நேரடியாக கண்டறியும், அங்கு நிலவும் குறைபாடுகளை அறிந்து அவற்றை அரசின் நேரடிக்கவனத்துக்கு கொண்டுவந்து பரிகாரம் காணத்தூண்டவும், சென்றவார இறுதியில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் இரண்டாவது தடவையாக கிழக்குமாகாணத்துக்குசென்றிருந்தார். ஆயினும் அவரது இந்த விஜயத்தை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பூரணமாக இருட்டடிப்பு செய்தது.

எதிர்க்கட்சித் தலைவர், சூறாவளி அனர்த்தம் ஏற்பட்டு ஒரு சில நாட்களிலேயே மட்டக்களப்புக்கு சென்று அங்கு வாகனவசதிகள் இல்லாத நிலையில் கால்நடையாகவே சூறாவளி சேதங்களைச் சுற்றிப் பார்த்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல்கூறி விட்டுக் கொழும்பு திரும்பினார். இப்போது இரண்டாவது தடவையாக சென்றவார இறுதியில் மட்டக்களப்புக்கு சென்றிருக்கிறார்.

யார் யாரிடமிருந்தெல்லாமோ கிழக்கு மாகாணத்துக்கு சூறாவளியால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் பற்றியும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அளிக்கப்பட வேண்டிய நிவாரணங்கள் பற்றியும் பேட்டிகள் கண்டு வானொலியின் ஒலிபரப்பும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையினர், நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பேரிழப்புக்குறித்து, நாட்டின்

—4-ம் பக்கம் பார்க்க

# அராஜகம் நடைபெறும்போது ஐ.ஜி.பி. யாழ்நகரில் நின்றார்?

யாழ் நகரில் சென்ற செய்வாய்க்கிழமை 5.12.78 மாலை ஆயுதப் பொலிசார் பொதுமக்களைத் தாக்கியும், கடைகளை உடைத்துச் சூறையாடியும் அராஜகம் விளைவித்தபோது, யாழ்ப்பாணத்திலேயே பொலிஸ் மா அதிபர் திரு, அனா செனிவிரத்தினாவும் தங்கியிருந்ததாக தெரிய வருகிறது. பொலீஸ் மா அதிபர் அன்றையதினம் பிற்பகல்4மணிக்கேகொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துசேர்ந்து விட்டாராம். சென்றஞாயிறு சுதந்திரனில் (10-12-78) சம்பவம் நடைபெற்ற ஒருமணிநேரம் கழித்தே பொலீஸ் மா அதிபர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததாக குறிப்பிட்டிருந்தோம். ஆயினும் நாம் மேற்கொண்டு நடத்திய விசாரணையின் பயனாக சம்பவம் நடைபெறுவதற்கு முன்னரே திரு. அனா செனிவிரத்தினா யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து விட்டதாகத் தெரிய வந்துள்ளது.

பொலீஸ் மா அதிபர் யாழ்ப்பாணத்தில் தங்கி நின்றசமயத்திலேயே இப்படியொரு அராஜகத்தில் பொலிசார் இறங்கியதை அறிந்துயாழ்ப்பாண மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்பட்டனர்; இளம் பெண்கள் த[illegible]மயிரில் பிடித்து இழு[illegible]பட்டு அடித்து விரட்டப்பட்டனர். கடைகள் அடித்து நொருக்கப்பட்டன வாகனங்கள்சேதப்படுத்தப்பட்டன; இவ்வளவு அராஜகமும் பொலீஸ் மா அதிபர் தங்கியிருந்த போதே நடைபெற்ற தென்றால், தமிழ் மக்கள் இனியும் பொலிசாரில் நம்பிக்கை வைக்க முடியுமா? என்ற கேள்வியே எழுப்பப்படுகிறது.

பொலிஸ் மா அதிபரை பொலிசார்ஒன்றில்பொருட்படுத்த வில்லை; அல்லது தாம் தமிழ் மக்களுக்குச் செய்யும் அராஜகங்களுக்கு ஐ.ஜி.பி.யின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளலாம் ஒரு நம்பிக்கை பொலிசாருக்கு ஏற்பட்டிருக்கவேண்டும்; இல்லாவிடின் இப்படியாக அவர்கள் நடந்திருப்பார்களா? என்று சட்டத்தரணி ஒருவர் கேள்வியெழுப்பினார்.

தக்கசமயத்தில் தலையிட்டு பொலிசாரின் அராஜகத்தைக்கட்டுப்படுத்தியதற்காக யாழ் அரசாங்க அதிபருக்கு சுதந்திரன் நிருபர் நன்றி தெரிவித்தபோது ''இல்லாவிட்டால், மற்றோர் 1977 உருவாகியிருக்கும்'' என்று அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

# சுதந்திரன் உணர்ச்சியை தூண்டுகிறதா?

''என்னையும் எனது கட்சியையும் ஆதரித்து எழுதும் பத்திரிகைகளிலும் சில சமயங்களில் உணர்ச்சியைத் தூண்டும் விதத்தில் கட்டுரைகள் பிரசுரமாவதுண்டு. அப்படியானசமயங்களில் நானும் அப்பத்திரிகைகளை எச்சரிப்பதுண்டு. உணர்ச்சிகளைத் தூண்டும் கட்டுரைகளைப் பிரசுரிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டும் உள்ளேன் என்றாலும் எல்லா நேரத்திலும் என்னால் கண்காணித்துக்கொண்டிருக்கமுடிவதில்லை; எனவே பத்திரிகைப் பேரவை இப்படியான விஷயத்தில் கவனமெடுத்து உணர்ச்சியைத் தூண்டும் பிரசுரங்களைத் தடுக்கவேண்டும்.',

— பாராளுமன்றத்தில் ராஜாங்க அமைச்சு மானியம் மீது உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் சில பத்திரிகைகளின் பொறுப்பற்ற தன்மையைக் கண்டித்து மேற்கண்டவாறு கூறியதாக நாளேடுகள் செய்தி வெளியிட்டிருந்தன-

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் முழுமையான பேச்சையும். எந்தக் கட்டத்தில் எதற்காக இவ்வாறு கூறினார் என்பதையும், 'ஹன்சாட்' புத்தகத்தைப் படித்த பின்புதான் தெளிவாக தெரிந்து கொள்ளமுடியும்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எந்தப்பத்திரிகையை மனதில் வைத்துக் கொண்டு இவ்வாறு கூறியிருக்கிறாரோ நாம் அறியோம்.

ஆனால்— சுதந்திரனைப் பொறுத்தவரை —சுதந்திரனும் கூட்டணியின் ஆதரவுப் பத்திரிகையென்று கருதப்படுவதால்—நமது நிலையை இங்கு விளக்கியாக வேண்டியிருக்கிறது.

சுதந்திரன் எந்த ஒரு கட்சியினதும் ''கட்சிப்பத்திரிகை'' அல்ல; ஆனால், தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் சமுதாய, பொருளாதார விடுதலைக்கும் நல்வாழ்வுக்குமாகப்போராடுவதற்கும் குரல்கொடுப்பதற்கும் துணிந்து நின்று வாதாடுவதற்குமாக முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் தந்தை செல்வா அவர்களினால் தொடங்கப்பட்ட ஓர்ஏடு.

'சுதந்திரன்' என்று தனது பெயரைக் கொண்டிருப்பதுபோலவே சுதந்திரன் சுதந்திரமாகவும், சுயேச்சையாகவும் வெளிவந்து கொண்டிருக்கிறது; அதே சமயத்தில் தமிழ் தேசிய இனத்தின் அரசியல், சமுதாய, பொருளாதாரவிடுதலைக்காக உழைக்கும் மாபெரும் விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு சுதந்திரன் ஆதரவு நல்கி வருகிறது.

அதேசமயம், தேவையேற்படும்போது, கூட்டணி வழிதவறுவதாகத் தோன்றும்போது, அதைக் கண்டிக்கவும்இடித்துரைக்கவும் தனக்கிருக்கும் உரிமையை சுதந்திரன் ஒருபோதும் இழந்ததில்லை. அந்தக்கடமையை ஆற்றியும் வருகிறது.

சுதந்திரன் எந்த ஒரு இனத்துக்கும் எதிரானதுமல்ல; அது எந்த இனத்துக்கும் எதிராக உணர்ச்சியைத் தூண்டியதும் கிடையாது,

தமிழ்த் தேசிய உணர்ச்சியையே சுதந்திரன் வளர்க்கிறது; தமிழ் மக்களிடையே சுதந்திர ஆர்வத்தை வளர்க்கிறது; ஆண்ட தமிழ்ப்பரம்பரை மீண்டும் தன்னைத் தானே ஆளவேண்டும் என்ற உறுதிப்பாட்டை அது வளர்க்கிறது.

தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக மாற்றார் கக்கும் இனவெறியையும் செய்யும் சூழ்ச்சிகளையும் காலத்துக்குக்காலம் அம்பலப்படுத்தி — தமிழினத்தை எச்சரிக்கிறது.

தமிழ் தேசிய இனத்தின் உரிமைகளுக்காகவும், சுதந்திரத்துக்காகவும், இனப் பாரபட்சங்களுக்கு எதிராகவும், கடுமையான தொனியில் வாதிடுகிறது.

சுதந்திரன் உண்மைகளை எடுத்துக்கூறும்போது-அரசின் இனப்பாரபட்சங்களை விமர்சிக்கும்போது— அது இனவாதமாகவோ அல்லது தமிழ் மக்களின் உணர்ச்சியைத் தூண்டுவதாகவோ அரசு கருதுமானால் -- நாம் அதற்கு எதுவும் செய்ய முடியாது; நாம்அதற்குஜவாப்தாரியுமல்ல; அரசின் இனப்பாரபட்ச நடவடிக்கைகளின் எதிர் விளைவே அது.

நாம் இன விடுதலை உணர்வைவளர்க்கிறோமே தவிர — உணர்ச்சியைத் தூண்டி விடுவதில்லை. ஆனால் சிங்கள அரசின் இனப்பாரபட்சங்களை நாம் அம்பலப்படுத்தும் போது அத்தகைய அநீதிக்கு எதிராகப்போராட வேண்டும்என்ற உணர்ச்சி தமிழ் மக்களிடம் ஏற்படவே செய்யும்; அநீதிகளுக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற அந்த உணர்ச்சியை நாம் எப்போதும் வளர்த்துக் கொண்டேயிருப்போம்,

நாம் இதைத்தான் செய்கிறோமே தவிர — சிங்கள இனத்துக்கோ—வேறு எந்த இனத்துக்கோ எதிரான உணர்ச்சியை தூண்டும் கட்டுரைகளை நாம் ஒருபோதும் வெளியிட்டதுமில்லை — வெளியிடப் போவதுமில்லை — என்பதை இங்குகுறிப்பிட்டுக்கூறவிரும்புகிறோம்.

நம்முடைய இனத்தின் உரிமைக்கும். தமிழீழத்தின் விடுதலைக்குமாக, நாம் தொய்யாமல் துவளாமல் எழுதுவதும், குரல் கொடுப்பதும் சிங்கள அரசின் கண்களுக்குஇனவாதமாகவோ, உணர்ச்சியைத் தூண்டுவதாகவோ தெரியுமானால் — சிங்கள சிறீலங்கா அரசின் இனப்பாரபட்சங்களையும் திட்டமிட்ட சதிகளையும்சந்திக்குக் கொண்டுவந்து அவற்றை அம்பலப்படுத்துவதால் தமிழ் மக்களின் உணர்ச்சியை நாம் தூண்டிவிடுவதாக அரசு கருதுமானால்- நாம் அதற்கு என்ன செய்ய முடியும்?

நாம் நமது இக்கடமைகளைச் செய்து கொண்டேயிருப்போம்- விளைவுகளைப் பொருட்படுத்தாமல். இதுவே தந்தை செல்வா எமக்கு காட்டிச் சென்ற வழியாகும்.

— ஆசிரியர்

# அமிர் கொடுத்த 'டோஸ்'

கிழக்குமாகாண சூறாவளி நிவாரண வேலைகளை நேரடியாகக் கவனிப்பதற்கு, ஜனாதிபதி, பிரதமர், திருமதி பிரேமதாசா, எதிர்க்கட்சித்தலைவர், சபாநாயகர், மற்றும்அமைச்சர்கள்சென்றவார இறுதியில்மட்டக்களப்புக்கு சென்றிருந்தனரல்லவா? மட்டக்களப்பு மாவட்டத்தை மீண்டும் புனரமைப்பதுகுறித்து இவர்கள் பேசிக்கொண்டிருந்த போதுநீதியமைச்சர் திரு கே. டபிள்யூ. தேவநாயகம்- ''இங்கு வெளியார் எவரும் தேவையில்லை— யாழ்ப்பாணத்திலிருந்து வரத் தேவையில்லை'' என்று திரு. அமிர்தலிங்கத்தின் முன்னிலையில் திருமதி பிரேமதாசாவிடம் கூறினாராம். உடனேதிரு. அமிர்தலிங்கம் திருமதி பிரேமதாசாவிடம் திரும்பி, ''அப்படியானால் அம்மணீ, நீங்களும் இங்கிருந்து திரும்பிப்போக வேண்டியதுதான்''என்று திரு. தேவநாயகத்துக்கு சூடாகப் பதிலளித்தார். இத்துடன்அந்தக்கதையை தேவநாயகம் நிறுத்திக் கொண்டார்.

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லேகல அரசுத் தோட்டத்தில் சிங்களக் காடையர்கள் அட்டகாசம்!

## மலையகத்தில் தமிழர்களின் பரிதாப நிலை!

## மக்கள் குரல்

நாங்கள் வசிக்கும் குண்டசாலை வட்டாரத்தில் கெங்காலைக்கிராமம் தமிழர் சிங்களவர் என்ற இனப் பேதமில்லாமல் நூற்றாண்டு காலம் வாழ்ந்த ஓர் இடம். சென்ற ஆகஸ்ட்டு கலவரத்தில் தாழ்ந்த உள்ளம் படைத்த சில மனிதர்களின் இனத்துவேஷ தூண்டுதலால்; அநேக தமிழர்களின் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டு உயிருக்கும் சேகம் விளைவிக்கப்பட்டது. தமிழர்களின் பெறுமதி வாய்ந்த காணிகளை பயமுறுத்தல் மூலம் சில தம்படிக்கு வாங்கி கொள்ளலாம் என்று சில சிங்கள துவேஷிகளின் அபிலாசையும் கொழுந்து விட்டெரிகிறது.

5-10-1978ல் வியாழக்கிழமை இரவு 9 மணிக்கு என் மகன் கெங்காலை ஸ்ரீமுருகன் சந்நிதிக்கு போய் பூசை முடித்து வரும் சமயம், சுமார் (20) இருபது சிங்கள வாலிபர்கள் பதுங்கி இருந்து எதிர்பாராமல் (KNUCKLE DUSTER) போன்ற ஆயுதங்களால் தாக்கி 250 ரூபா பெறுமதியுள்ள கைக்கடிகாரத்தையும் அபகரித்து—அக்கம் பக்கமுள்ள தமிழர்களை பொலிசுக்கு தகவல் கொடுத்தால் வீடுகளுக்கு தீவைப்பதாக எச்சரிக்கை செய்து போனார்கள்.

தேசிய ஒற்றுமைக்கு அரசாங்கம் பாடுபடுவதாக சொல்லி மறுபுறம் தொட்டிலையும் ஆட்டி குழந்தையையும் கிள்ளி விடும் செய்கையால், தமிழன் நாட்புறங்களில் இன்று பயந்து வாழும் நிலை உருவாகி வருகிறது. நாட்புறங்களில் தமிழ் இளைஞர்கள் மல்யுத்தம், விளையாட்டுப்போட்டி இவைகளை பயிலக் கூடாது என்பது சிங்கள இனத்துவேஷிகளின் பிடிவாதம். முந்தின அரசாங்கத்தில் கூட இப்படி ஒரு பொச்சரிப்பு ஏற்பட்டதில்லையே!

கனம் ஜனாதிபதி அவர்களுக்கு தமிழ் இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஆசை ஒரு வேளை இருந்தாலும், அவரைச் சுற்றியுள்ள இனத்துவேஷிகளுக்கு பயந்து இன்று தமிழினம் நசுக்கப்படுவதை தான், அறியாதவரைப் போல் நடிப்பது தார்மீகமாகாது; நேர்மையாகாது.

21-11-1978ல் குண்டசாலை வட்டாரத்தில் உள்ள பல்லேகலே அரசு தோட்டத்தில் சிங்கள காடையர்கள் புகுந்து தமிழ் தொழிலாளர்களை தாக்கி, பெண்கள், பிள்ளைகள் யாபேரையும் தாக்கி ஏழைத் தொழிலாளர்களின் கோழிகளைப் பிடித்து போனார்கள். இப்புதிய அரசாங்கம் தமிழர்களின் கோழிகளை பிடிக்கவும் நாட்டுப் புறங்களில் ஓர் இயக்கத்தை உருவாக்கி இருக்கிறது போலும், மலைநாட்டு மக்களை காப்பாற்ற பதவி வகிக்கும் ஸ்ரீ தொண்டமானை தேடிஅழைந்தாலும் அவர் முயற்சியும் செவிடன் காதில் ஊதப்படும் சங்கு தான்.

இனத்துவேஷம் கொண்ட ஒரு அரசாங்கத்தை கொழுக்க வைக்கவே தமிழர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். என்பது வெட்ட வெளிச்சம். சுதந்திரத்தை தமிழ் மக்கள் மோந்து பார்க்கும் நிலை கூட இல்லையே!

பாகிஸ்தானும், ஆப்கானிஸ்தானும், ஈரான், அரபு, துருக்கி எல்லாம் ஏன் ஒரே ராஜ்சியமாக இருக்கக் கூடாது? எல்லாமேபக்கத்தில் சேர்ந்த தொடர்பான பிரதேசங்களாகுமே! அங்கே சுதந்திர உணர்ச்சியுடன் மனிதன் மனிதனாக வாழ தனித்தேசமாக இயங்குகிறார்கள்; அங்கே கடவு சீட்டு இல்லாமல் யாரும் ஒரு தேசத்திலிருந்து வேறு தேசத்திற்குள் நுழைய முடியாது.

நம்மை வெறுப்பவரிடம் நாய் போல் திரும்பத் திரும்ப போய் உதைபடும் எம் தமிழ் தலைவர்களா எமக்கு சுதந்திரம் அளிக்கப் போகிறார்கள்?

எம் தமிழினத்தை வெளிச்சத்திற்கு அழைத்துப்போக—எம் தமிழ் தலைவர்கள், மகான்கள், மேதைகள், சீலமிக்கவர்கள், பண்பென்ற சொல்லுக்கே இலக்கணமாய், மனித உருவில் வந்த தெய்வங்களாக ஒன்று சேர்ந்து குரோதங்களை அகற்றி கடைமையில் ஈடுபட பிரார்த்திக்கிறோம்.

—பி. மதுவதேவர்முருகாஜயா,
30, அம்பகாவத்தை,
கெங்காலே,
(வழி) குண்டசாலே.

# மேற்கு ஜெர்மனியில் அமிர்தலிங்கம் பேசிய கூட்டத்தில் நடந்ததென்ன?

## சத்தியசீலன் தகவல்!

தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை ஆகியவற்றின் முன்னோடிகளில் ஒருவரும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில்முந்திய அரசாங்க காலத்தில் நான்காண்டுகள் சிறை சென்றவருமான திரு. பொன். சத்தியசிலன் அவர்களை அமைப்பாளராகக் கொண்ட மேற்கு ஜெர்மனியில் 'ஈழத் தமிழ் இளைஞர் இயக்கம்' இயங்கி வருகிறது. ஜெர்மனி முழுவதுக்குமாக தமிழ் இயக்கம் இதுவேயாகும்.

இந்த இயக்கம், திரு. சத்திய சீலனின் தலைமையில் தமிழ் ஈழப்பிரசாரத்தை அங்கு நடத்திவருகிறது. அண்மையில் ஜெர்மனிக்கு சென்றிருந்த தமிழீழத் தலைவர்களான திரு. வி.என். நவரத்தினம், திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோரை அழைத்துக் கூட்டங்களையும் நடத்தியுள்ளது.

27.10.78 அன்று திரு. சத்தியசீலனின் தலைமையில் திரு. அமிர்தலிங்கம் உரையாற்றினார். தலைவர் அவர்கள் பேச எழுவதற்கு முன்னால், ஐயக்கோனின் மகன் வசந்தகுமார் என்பவர் (இவரது தமயன் ரத்தினகுமார் ஜெர்மனியிலுள்ள தமிழ் இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்தவர்) எழுந்து காங்கேசன்சிமெந்து தொழிற்சாலைபற்றிக்கேள்வி கேட்டார். அதற்குப் பதில் சொன்னால்தான் தலைவரைப் பேசவிடுவேன் என்று கூறிய அவர், தனது கருத்தைக்கூறி விட்டு தானாகவே அங்கிருந்து வெளியேறினார். அவருடன் தமிழ்த் துரோகியொருவரும், மற்றும் இருவரும் வெளியேறினார்கள். ஐயக்கோனின் மகன் ஒருவழக்கில் தப்பியோடி இப்போது ஜெர்மனியில் வாழுபவர்.

ஜெர்மனியில் கப்பலில் வேலை செய்பவர்கள் தவிர ஏனைய தமிழ்ஈழத்து இளைஞர்கள் அரசியல் அடைக்கலம் பெற்றிருப்பவர்கள். தமிழர்களுக்கு தனிநாடு கிடைத்தபின்புதான் இலங்கைக்கு போவோம் என்று உறுதியெடுத்திருப்பவர்கள்.

தலைவர் அமிர்தலிங்கத்தின் உரையைக்கேட்கவந்திருந்த 300க்கு மேற்பட்ட தமிழர்களில் ஆகநான்கே நான்குபேர் மட்டும் அமிர் பேச ஆரம்பிக்குமுன் அங்கிருந்து அமைதியாக வெளியேறினார்கள். குமார்பொன்னம்பலம் கூறுவதுபோல, அவர்கள் அக்கூட்டத்தைக் குழப்பவும் இல்லை; கூட்டம் நடைபெறாமல் தடுக்கவும் இல்லை. இந்த நான்குபேர் வெளியேறியதைப் பற்றி கூட்டத்திற்கு வந்திருந்த வெரும் பொருட்படுத்தவும் இல்லை. ஏனெனில் இவர்களைக் காடையர்கள் என்றே அங்குள்ள தமிழர்கள் கருதி ஒதுக்கிவிட்டார்கள்.

தலைவர் அமிர் பேசும்போது, தமிழ்ஈழம் பற்றி வெளிநாடுகளில் மேற்கொள்ளவேண்டிய பிரசார முறைகள்பற்றியும், தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகத்துக்கு உதவுவதன் மூலம், தமிழ் பிரதேசக் குடியேற்றங்களுக்கு வெளிநாட்டுத் தமிழர்கள்உதவவேண்டுமென்றும்; தமிழீழ விடுதலைக்குப் போராடும் இளைஞர்களின் குடும்பங்கள் வறுமையால் துன்பப்படாதிருக்க அவர்களுக்கு செய்ய வேண்டிய பணஉதவிபற்றியும் வலியுறுத்தினர்.

அங்கு கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த திரு. அமிர்தலிங்கம், திரு. ஜெயசீலனின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், ''தமிழர் விடுதலைக் கூட்டணியின் முடிந்த முடிவுதமிழ் ஈழமே தவிர வேறு எதுவும் இல்லை'' என்று வலியுறுத்தினர்.

மேற்கண்ட தகவல்களை சுதந்திரனுக்கு அனுப்பியிருக்கும் திரு. சத்தியசீலன், மேற்கு ஜெர்மனியிலுள்ள தமிழர்கள் திரு. குமார் பொன்னப்பலத்தை ஒரு தமிழ்த் துரோகியாகவே கருதுகின்றனரே தவிர, அவரால் தமிழர்களுக்கு தமிழ் ஈழம் கிடைக்குமென்று கனவில் கூடகருதவில்லையென்று குறிப்பிட்டுள்ளார்.

# சிறையிலிருந்து வரும் எமது கண்ணீர் அஞ்சலிகள்

சூறுவளியின் சீற்றத்துக்குள்ளான மட்டுநகர் பற்றிய செய்திகளை அறிய முடியாத நாங்கள் மனக்கலக்கமுற்றிருந்த வேளை பத்திரிகையொன்றில் வெளிவந்த செய்தி ஒன்று எம்மைக்கண் கலங்கச் செய்து விட்டது. பழம் பெரும் தமிழரசுக் கட்சி அபிமானியான திரு. அலெக்சான்டர் ஐயாவும்அவரின் மனைவியும் சூறுவளியின் கோரத்தாக்குதலுக்குப் பலியாகி விட்டார்கள்.

இறைவா இது என்ன கொடுமை! நம்ப மறுக்கின்றது எமது உள்ளம் பேரிடி காரணமாக எம்மனைவரின் கண்களும்குளமாயின. மட்டுநகரில் கல்வி கற்றுக் கொண்டிருப்பவரும் சிறையில்வாடுபவருமான தெனியாயாவைச் சேர்ந்த மரியசூசை என்னும் இளைஞனின் பாதுகாவலரான ஐயாவின் மறைவு இளைஞர்களாகிய எம்மைப் பொறுத்தவரையில் பெரிய இழப்பாகும்.

வயது முதிர்ந்தவராயினும் இயக்கரீதியில் இளைஞர்களை முற்றுமுழுதாக அரவணைத்துக் கொண்டிருந்த இப் பெரியவர் தாம் கொண்ட இலட்சியத்திற்காகத் தனது சொந்த மருமகனாகிய இராஜன் செல்வநாயகத்தையே கடந்த இரு தேர்தல்களிலும் எதிர்த்து வேலை செய்தவர். எமது நீதி மன்ற வேலைகள் தொடர்பாக ஐயா காட்டிய ஆர்வம் அளவிட முடியாது.

அவரை நினைவு கூருகையில் சமீபத்தில் மட்டுநகர் நீதிமன்றத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்று எம்மனக் கண்முன் நிழலாடுகின்றது. மட்டுநகர் பொலிசார் சாட்டிய புதிய குற்றச் சாட்டிற்கிணங்க நீதவான், அண்ணன் காசி, மாவை உட்பட அனைவரையும் காலவரையறையின்றி விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டு விட்டார். அங்கு திரண்டிருந்த பெருந்திரளான இளைஞர்களும் மக்களும் உணர்ச்சி வசப்பட்டட்ட நிலையில் எம்மைச் சூழ்ந்துகொள்ளமுயற்சிக்கிறார்கள். அவ்வேளையில் சிங்கள காக்கிச் சட்டைக்காரனொருவன், நண்பன் வாசுதேவாவை உதைத்து விட்டான். இளைஞர்கள் குமுறுகின்றார்கள். அப்போது எட்டாம் வகுப்புப் படித்த உனக்கு எமது இளைஞர்கள் உதைக்க என்னடா யோக்கியதை இருக்கின்றது'' எனக் கேட்டவாறு ஐயா பொலிசாருடன் வாதாடுகின்றார்.

பொலிசார் திகைத்து நின்ற வேளையில் உதவி அத்தியட்சகர் அவரை சமாதானப் படுத்தி தான் அப் பொலிஸ்காரன் மீது நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த பின்னரே ஐயா அமைதியானார். பிறக்கும் பொழுதே இறப்பதும் நிச்சயமாயினும். சிலரது இறப்புக்கள் நெஞ்சினை இரணகளமாக்கி விடுவது தவிர்க்க முடியாததாகும். அவ்வகையிலே ஐயாவின் மறைவினால் நெஞ்சுஇரணகளமாகியுள்ள மட்டு நகரிலுள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்களோடு சேர்ந்து சிறையில் இருக்கின்ற இளைஞர்களும்தங்கள் அஞ்சலியை தெரிவிப்பதோடு தாய் தந்தையரை இழந்து வாடும் பேரவை நண்பர் சந்திரனுக்கும் அவரின் சகோதர, சகோதரிகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

—பொன். வேனுதாஸ்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “நாயைவிட மோசமாக தமிழனை

# சுட்டுக்கொன்றான் இராணுவ வெறியன்

# இந்த ஆட்சியிலும் அக்கிரமம் நீடிக்கிறது”

அன்றைய பிரதம அமைச்சரும் இன்றைய சனாதிபதியு ந்தச் சபையிற் பேசுகையில் முன்னைய அரசாங்க காலத்தில் பொலிஸ் படையினரால் செய்யப்பட்ட முறைகேடான காரியங்கள் வருங்காலத்தில் நடைபெற இடம் இருக்காது என்று தெளிவான உறுதி மொழியை இந்தச்சபையிற் கொடுத்தார். குற்றவியல் நீதி விசாரணைக்குழு பற்றியசட்டத்தை இரத்துச் செய்யக் கொண்டுவரப்பட்ட சட்டமூலம் மீது பேசும்போதும் இன்றைய மாண்புமிகு சனாதிபதி நாலாவது மாடி என்று அழைக்கப்படுகின்ற இரகசியப் பொலிஸ் கந்தோர் மூடப்படும் என்று கூறினார். அங்கு யாரும் கொண்டு செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட மாட்டாது என்று உறுதி அளித்தார். அதுபோல முன்னைய அரசாங்கத்தின் கீழ் புதிதாகச்சிருஷ்டிக்கப்பட்ட விசாரணை நிலையம் பஜெட் ரேட் என்ற இடத்தில் இரகசிய விசாரணை நிலையமாக இருக்க மாட்டாது என்று அவர் கூறினார். அவர் இந்தச்சபையில் தெட்டத்தெளிவாக அளித்த உறுதிமொழி எந்த விசாரணையும் பொலிஸ் நிலையங்களில் நடைபெறுமே தவிர வேறு எந்த இடத்திலும் நடைபெற இந்த அரசாங்கத்தின் கீழ் அனுமதி இல்லை என்பது.

இந்தச் சபை ஒத்திவைப்புப் பிரேரணையின் மீது முன்னர் சில விடயங்களை எடுத்துக்கூறும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது. அதாவது சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டு இரகசியப் பொலிசாரால் கொடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட சில சம்பவங்களை இங்கு கூறியிருக்கிறேன்.

உதாரணமாக இத்தாலி நாட்டிற்குப் பிரயாணஞ் செய்ய கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விமானம் ஏறுதற்கு ஆயத்தமாக நின்ற பரமானந்தன் என்ற இளைஞனை இரகசியப் பொலிசார் கைது செய்து மன்னாருக்குக்கொண்டு சென்று அவனுக்கு இழைத்த சித்திரவதை முன்னைய அரசாங்க காலத்தில் நடந்த சித்திரவதைகளிலும்பார்க்க மிஞ்சியதாக இருந்தது. இது பற்றி நான் இச்சபையிலே எடுத்துக் கூறியிருக்கிறேன். அவரைக்கொண்டுபோய் நிர்வாணமாக்கி இரண்டு மரங்களில், அவன் காலை ஒரு மரத்திலும் கைகளை இன்னொரு மரத்திலும் கட்டித் தொங்கவிட்டு கீழே நெருப்பை மூட்டி சுடப்பட்ட பன்றியை வாட்டுவது போல் அவனை வாட்டியதை இச்சபையிலே எடுத்துக் கூறினேன்.

நெருப்பின் அகோரம் தாங்க முடியாமல் அழும் வரை அவனை வதைத்த இரகசியப் பொலிசார் தூரத்திலே போய் நின்று பின்னர் வந்து நெருப்பை அணைத்துவிட்டு அவனுக்கு ஒரு மனிதன் நினைக்க முடியாத சித்திரவதையைத் தொடர்ந்து செய்திருக்கிறார்கள்.

அவன் விடுதலையானபின் வந்து எனக்கு நேரில் முறையிட்டான், அவன் வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெற்றதை நான்நன்கு விசாரித்ததன்பின்தான் இந்தச் சபையிலே இதனைக் கூறுகிறேன். அவனை, அவனுடைய ஆண்குறியில் கயிறு போட்டு இழுத்துச் சென்றிருக்கிறார்கள் பொலிசார். அதனால் அவன் தன்னுடைய ஆண்மையையே இழக்கும் நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறான்.

ஜனாப் எம். ஏ. எம். ஜலாதீன்: எப்பொழுது அது நடந்தது?

அமிர்தலிங்கம்: சில மாதங்களுக்கு முன்பு அப்படிப் பல வாலிபர்கள் துன்புறுத்தல்களுககு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இனிமேலாவது இப்படி நடைபெறக்கூடாது என்பதற்காகத்தான் இதை இந்தச்சபையிலே எடுத்துக் கூறுகிறேன். பொலிசாருக்கு எதிரான முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக பொலிசார் அல்லாத சில உத்தியோகத்தர்களை அரசாங்கம் நியமிக்க விருப்பதாகப் பத்திரிகைகளில் படித்தேன். அது எவ்வளவு தூரம் உண்மையென்பது எனக்குத் தெரியாது. ஆனல், அப்படி விசாரிப்பதற்கு வசதி செய்யப்பட வேண்டியது மிகவும் அத்தியாவசியம்.

பொலிசாருக்கு எதிரான விசாரணையை பொலிஸ் அதிகாரிகளே நடத்தும்பொழுது எங்கேயாவது ஆயிரத்தில் ஒருவர் சரியான விசாரணையை நடத்துவாரேயொழிய ஏனையோர் எல்லாவற்றையும் சமாளிப்பதற்குத் தான் முயற்சியெடுப்பார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனபடியால்தான் பொலிசார் அல்லாத ஒருவரை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் நியமித்து பொலிசாருக்கு எதிரான விசாரணைகள் தாமதமின்றி நடைபெற வழிவகுக்கப்படவேண்டும் என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூறவிரும்புகின்றேன்.

## புகைவண்டிச்சூடு

இந்தச் சந்தர்ப்பத்திலே, யாழ்ப்பாண புகைவண்டியிலே, மாங்குளத்துக்கு அருகாமையில் நடந்த ஒரு சம்பவத்தை நான் இந்தச் சபையிலே எடுத்துக்கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். எனது தொகுதியைச் சேர்ந்த ஒருவர் புகைவண்டியில் சுடப்பட்டு மரணமானார். நான் அவருடைய மரணச் சடங்குக்குக்கூடச் சென்றிருந்தேன்,

என்ன நடந்தது? அவர் புகைவண்டியில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்து கொண்டிருந்தார். பிரயாணம் செய்யும் பொழுது சற்று மதுபானம் பாவிப்பது சிலருடைய வழக்கமாகி விட்டது. அவரும் சிறிது மதுபோதையில் இருந்தார். தாம் கொண்டு வந்த உணவை உண்ணும் பொழுது அந்தப் புகையிரதத்துக்கு ஊடாகச் சென்ற இராணுவ வீரர் ஒருவருக்கு அதில் ஒரு பகுதியைக்கொடுக்க முயற்சித்தார். முன்சென்றவர் அதைத் தட்டிவிட்டுப்போய் விட்டார். பின்னல் வந்தவர் அவருக்கு ஏதோ பதில் கூறி ஒரு வாக்குவாதத்தை ஏற்படுத்தினர். அந்த வாக்குவாதம் ஏற்பட்டவுடன் அந்தப் புகைவண்டிக்குள்ளே அவரை அடித்திருக்கலாம்? கைது செய்திருக்கலாம்: அல்லதுஎதுவும் செய்திருக்கலாம்.

அவ்வளவு பிரயாணிகளும் பயணம் செய்து கொண்டிருந்த அப் புகைவண்டியிலே தனது துப்பாக்கியை எடுத்த அந்த மனிதனைச் சுட்டுவிட்டான் அந்த இராணுவ வீரன். அவருக்குச் சுட்ட சூடு அவருடைய உடலுக்கூடாகப் பாய்ந்து பக்கத்திலே இருந்த இன்னொரு கர்ப்பவதியான பெண்ணின் கைக்கூடாகச் சென்று மூன்றாவது பிரயாணியையும் தாக்கியிருக்கிறது. அந்த மூன்று பேரிலே ஒருவர் இறந்தார். மற்றவர்கள் இருவரும் வைத்தியசாலையிலே அனுமதிக்கப்பட்டார்.

உண்மையிலே இவ்வளவு மிருகத்தனமாக ஒரு மனிதனை—நாயைக்கூட இப்படி யாரும் சுடமாட்டார்கள்—அதுவும் தான் செய்வது என்ன என்பதை அறியாது மதுபோதையிலிருந்த ஒரு மனிதனை, அந்த மனிதன் என்ன நிலையிலிருக்கிறான் என்பதைத்தெரிந்து கொண்டும் இவ்விதமாகச் சுட்டுக் கொள்ளும் அளவுக்கு அந்த் இராணுவவீரன் வெறிபிடித்தவனாக இருந்திருக்கிறான். இப்படியானவர்களைப் பொதுமக்களோடு தொடர்பு கொள்ளும் வேலைகளில்

## பாராளுமன்றத்தில்

## அமிர்தலிங்கம் கர்ச்சனை!

ஈடுபடுத்துவது பீதிகப்பயங்கரமான ஒருநிலையைத்தான் உருவாக்குகிறது. இந்தச் சம்பவம் தமிழ்மக்களுடைய மனதிலே ஏற்படுத்திய ஓர் எண்ணம் என்னவென்றால், சுடப்பட்டவர் ஒரு தமிழ் மகனாக இருந்த காரணத்தினால் ஒரு யோசனையும் இல்லாமல், ஈவிரக்க இல்லாமல் அந்த இராணுவ வீரன் நாயைக்கூட சுடாத வகையில் சுட்டுக்கொன்றான் என்பதுதான்.

அந்த இராணுவவீரனுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது என்று எனக்குத் இன்றுவரைக்கும் தெரியாது. நீதி மன்றத்திலே மரண விசாரணை நடந்தது மட்டும் எனக்குத் தெரியும். மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது பற்றி நான் அறியவில்லை. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைக் கனம் பாதுகாப்புத் துணை அமைச்சர் அவர்கள் இந்த சபையிலே எடுத்துக்கூற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஓர் இளைஞன் மாத்திரமல்ல, பல இளைஞர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். சமீபத்திற்கூட எமது இளைஞர் இயக்கத் தலைவர்களாக இருக்கும், மட்டக்களப்பில் எமது கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஒரு வேட்பாளரான கவிஞன் காசி ஆனந்தனும் மாவை சேனாதிராஜாவும் சில துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார்கள் என்று மட்டக்களப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டார்கள்.

அவர்களைச் சிறையில் வைத்துக்கூடத் தாக்கியிருக்கிறார்கள். துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார்கள் என்று அவர்களுக்கெதிராக நீதிபதிகள் முன்னால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. என் மதிப்பிற்குரிய நண்பர் கௌரவ நல்லூர் பாராளுமன்ற அங்கத்தவர் (திரு. எம். சிவசிதம்பரம்) அவர்களைத் தொடர்ந்து சிறையில் வைத்திருக்க முடியாதெனஎடுத்துரைத்தார். நீதிபதி தமது தீர்ப்பை அடுத்த நாளைக்கு ஒத்தி வைத்தார். அடுத்த நாள் என்ன நடந்தது? இதிலே தான் எவ்வளவு தூரம் பொலிசார் உண்மையாக நடக்கிறார்கள் என்பதை கௌரவ அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முதலில் அவர்களுக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை அவர்கள் துண்டுப் பிரசுரத்தை விநியோகித்தார்கள் என்பது. சட்ட வல்லுநர் வாதாடி நீதிபதியவர்கள் அவர்களுக்குப் பிணை அனுமதிக்கும் நிலைஏற்பட்ட போது அடுத்த நாள் இன்னொரு அறிக்கை முன்பு சொல்லப்படாத குற்றச் சாட்டுக்களை உள்ளடக்கிச் சமர்ப்பிக்கப்பட்டது. எப்படியாவது அவர்களை அங்கே தடுத்து அடைத்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காக இந்த இரண்டாவது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அவர்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தின் பேரில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டால் முதன் முதல் சமர்ப்பிக்கப்பட்ட அந்த அறிக்கையிலேயே அவர்கள் முழு விபரத்தையும் கொடுத்திருக்கலாம். அதை விட்டு பின் ஓர் அறிக்கையை அடுத்த நாள் கொடுகத் தேவை என்ன என்பதைத்தான் என்னால் அறிய முடியவில்லை. இந்த விதமாகப் பலவகையிலும் நீதிபதிகளுக்கு உண்மையை மழுப்பும் வகையில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. அடைத்து வைக்கும் வகையில் பொலிசார் இயங்க விடக்கூடாது.

நான் குறிப்பிட்ட கவிஞர் காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோருடன் இன்னும் பன்னிரண்டு இளைஞர்கள் துண்டுப் பிரசுரம் விநியோகித்த வெறும் குற்றத்திற்காகப் பலமாதங்கள் சிறையிலிருக்கும் நிலைமை பொலிசாரின் அறிக்கையால் ஏற்பட்டிருக்கிறது. இவர்களுக்கெதிரான அறிக்கைக்கு அடிப்படைக் காரணம் உண்டா என்பதைப் பொறுப்பு வாய்ந்தவர்கள் ஆராய வேண்டும்.

(பாராளுமன்றத்தில் -30-11-78)

---

## கிளிநொச்சி த.ம.பேரவை அமைப்பாளர் அறிக்கை.

‘‘சூறாவளியால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் நம் அரிய சகோதரர்களுக்கு நிவாரணமளிக்கும் நிதி, உணவுப் பொருட்கள், உடைகள் ஆகியன சேர்ப்பதற்கு முழு மனதுடன் எமக்கு ஒத்துழைப்பு நல்கிய சகோதரிகள் இராமநாதபுரம் க.சாரதாதேவி, தி.கலைச்செல்வி, வே.தங்கேஸ்வரி, வட்டக்கச்சி வி.கமலாதேவி, தி.கமலசாந்தி, ஆனையிறவு பொ.பரிமளபூபதி, பொ.பத்மாதேவி சு.பவுலின்கமலா, கனகபுரம் வ.இராஜவல்லி, சந்திரா. வன்னேரிக்குளம், ஆ.பராசக்தி, க.கனகேஸ்வரி. கண்டாவளை பொ.தங்கேஸ்வரி பொ.மங்கையர் திலகம், ஆகியோருக்கு கிளிநொச்சி மகளிர் பேரவையின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேகரிக்கப்பட்ட நிதியும் (ரூபா 1607/-), உணவுப் பொருட்களும் கிளிநொச்சிக் கூட்டணிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன’.

இவ்வாறு கிளிநொச்சித் தொகுதி. த.ம.பேரவை அமைப்பாளர் தியாகராசா தங்கமலர் அறிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இந்து'வின் முகத்திரைக்குள் தன்னை மறைக்கிறது சிங்கள ஏகாதிபத்தியம்!

1977 ஆடிப் பொதுத் தேர்தலில் தமிழ் ஈழ மக்கள் அளித்த ஜனநாயகத்தீர்ப்பின் அடிப்படையை அங்கீகரித்து தமிழ் ஈழத்தின் இறைமையையும் ஆட்சியுரிமையையும் தமிழ் ஈழ மக்களிடமே ஒப்படைக்காமல்—தமிழ் ஈழ மக்களின் விருப்பத்துக்கு முரணாக சர்வதேச சட்டவிதியைமீறி அவர்களை தனது ஆயுதப்படைகளின் துணைகொண்டுபலவந்தமாக ஆண்டுவரும் சிங்கள சிறீலங்காவின் ஜே. ஆர். ஆட்சி, இப்போது தனது நவீன காலனித்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் உலகின் கண்களிலிருந்து திரையிட்டு மறைப்பதற்கு சென்னை இந்துப்பத்திரிகையின் துணையை நாடியுள்ளது.

சிங்கள சிறீலங்காவின் தலைநகரான கொழும்பில் உள்ள கைக்கூலி ஒருவரைக் கொண்டு, சென்னை இந்துப் பத்திரிகைக்கு சில தவறான தகவல்களை கொடுத்து, தனக்கு சார்பாக சில தலையங்கங்களை 'இந்து'வைக் கொண்டு எழுதவைப்பதில் வெற்றிபெற்றுவிட்ட ஜே. ஆர். ஆட்சி, 'இந்து'வில் வெளிவந்த குறித்த தலையங்கங்களை இப்போது ஒரு பிரசுரமாக வெளியிட்டு அவற்றை சிறீலங்காவிலும், தமிழ் ஈழத்திலும், ஏனைய வெளிநாடுகளிலும் வினியோகித்துவருகிறது.

சிறீலங்கா அரசுதான் வெளியிட்டுள்ள 'இந்து'—பிரசுரத்தை தமிழ்ப்பாடசாலைகளுக்கும் அனுப்பியுள்ளது. 'இந்து'வில் பிடித்துத் தொங்கவேண்டிய பரிதாப நிலை, இன்று பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு வந்திருப்பது குறித்து கூட்டணிப் பிரமுகர் ஒருவர் கருத்து வெளியிடுகையில்—சர்வதேச ரீதியில் வெளிநாடுகளில் நாம் மேற்கொண்ட பிரசாரத்திற்கு தாக்குப்பிடிக்கமுடியாத நிலையில்தான் சிங்கள அரசு, இப்போது 'இந்து'வின் முகத்திரைக்குள் தன்னை மறைத்துக்கொள்ளவேண்டியேற்பட்டுள்ளதென்றும், 'இந்து'ப்பத்திரிகையாளர்களுக்கு தமிழர்களின் நிலை குறித்து விரைவில் தெளிவுபடுத்தப்படும் என்றும்தெரிவித்தார்.

# முழு சக்தியையும் செலவிட்டு கிழக்கை புனரமையுங்கள்!

## ஆட்சியாளரிடம் அமிர் கோரிக்கை!

'நாட்டின் வீடமைப்புத் திட்டத்தின் முழுச் சக்தியையும் கிழக்கு மாகாணத்திற்கு திருப்புவது அத்தியாவசியமாகும். கடந்த வாரம் நான் அங்கு சென்றபோது அம்பாறை மாவட்டத்தின் வடபகுதியிலும், மட்டக்களப்பு மாவட்டத்திலும் வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களைக்கண்டேன். வீடமைப்புத் திணைக்களத்தின் சேவைமட்டுமல்லாது கட்டடத்திணைக்களத்தின் முழுச்சேவையும் அங்கு அனுப்பப்படவேண்டும். மழைகாலம் நெருங்கிவிட்டது. அதற்குமுன் வீடுகளை கட்டிக்கொள்வதற்குத் தேவையான உபகரணங்களை கட்டடத் திணைக்களம் வழங்கவேண்டும். ஓடு மரங்கள் விநியோகத்தை கட்டடத்திணைக்களமே பொறுப்பேற்கவேண்டும். அரியப்பட்ட மரங்கள் கட்டடப் பொருட் திணைக்களத்தால் விநியோகிக்கப்படவேண்டும். இதை முதல் வேலையாகச் செய்யவேண்டும். மட்டக்களப்பு, கல்முனை, காத்தான்குடி, வாழைச்சேனை போன்ற நகர்களை - விசால வீதிகளோடு புனரமைப்புச் செய்வதற்கு இச் சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தவேண்டும். சரியான திட்டங்கள் தீட்டி இந்நகரங்களை நிர்மாணிக்கவேண்டும்.

''அடுத்த இரண்டு வாரங்களுக்கிடையில் சூறுவளியால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்து நிற்கும் மக்களுக்கு கூரைகளை அமைக்க முழுச்சக்தியும் பயன்படுத்தப்படவேண்டும்.

விமானத்தில் நான்சென்றபோது, காத்தான்குடிக்கு ஏற்பட்டுள்ள நிலையைக்கண்டேன். ஒரு வீடாவது தப்பவில்லை. ஒரு மசூதியிலேனும் கூரையைக் காணவில்லை.

—இவ்வாறு பாராளுமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் அரசாங்கத்திடம் வற்புறுத்தினர்.

## கோண்டாவில் கிழக்கில் நிதி சேகரிப்பு

சிறியெழுந்த சூறுவளியின் கோரப்பிடியில்சிக்கிதவிக்கும் மட்டுநகர் மக்களுக்கு உதவுவதற்காக தமிழர் விடுதலை கூட்டணி கோண்டாவில் கிழக்கு கிளையினர். எரன் விளையாட்டு கழக உறுப்பினர்களின் உதவியுடன் தலைவர் திரு. கருணநாயகம் தலைமையில் கடந்த இரு தினங்களாக நிதியும் பொருட்களும் சேகரித்து தலைமை நிலைய செயலாளர் பெ. கனகசபாபதியிடம் ஒப்படைத்துள்ளனர்.

# கிழக்கு மாகாணத்தில் தமிழ் இளைஞர் பேரவையின் சீரிய பணி

கிழக்கு மாகாணத்தில் சூறுவளி வீசியதைஅறிந்ததும் வடக்கில் இருந்து முதன் முதலில் தொண்டர்களை அனுப்பி வைத்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையை ஏற்றுச் செயற்படும் தமிழ் இளைஞர் பேரவையே.

நிலைமையை அவதானித்த தமிழ் இளைஞர் பேரவை ஓர் கோஷ்டியை அனுப்பி பாதைகளை அவதானித்ததுடன் போக்குவரத்துஒழுங்குகளையும் மேற்கொண்டது. தமிழ் இளைஞர் பேரவை ஐம்பது, உறுப்பினர்களை இரண்டு குழுக்களாக, அனுப்பியது.

மட்டுநகர் பிரதான வீதியின் போக்குவரத்தை சீர்செய்தார்கள் தமிழ் இளைஞர் பேரவை தொண்டர்கள். மட்டுநகர் அரசடி வீதி மகாவித்தியாலயத்தில் ஓர்முகாமைஅமைத்தனர். இம்முகாமைதலைமை முகாமாகக்கொண்டு இன்று மூன்று முகாம்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தொண்டர்கள் மட்டுநகர் வைத்தியசாலை சீரமைப்பு வேலைகளில் திறம்படச் செயல்பட்டதை பொதுமக்களும், அரச அதிகாரிகளும் பெரிதும் பாராட்டுகின்றனர். தமிழ் இளைஞர் பேரவையின் தொண்டர் குழு அரசின் அங்கீகாரம் பெற்ற தொண்டர் குழுவாக இன்று செயல்படுகிறது. 4-12-78ல் காலையில் தமிழ் இளைஞர் பேரவையின் மேலும் ஓர் தொண்டர் கோஷ்டி 52 உறுப்பினர்களுடன் புறப்பட்டுள்ளது.

தமிழ் இளைஞர் பேரவையின் 110 தொண்டர்கள் கிழக்கில் சேவையில் ஈடுபட்டுள்ள அதே வேளை நூற்றுக்கணக்கான தொண்டர்கள் வடக்கின் பல பகுதிகளிலும் நிவாரண உதவிப் பொருட்கள் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை பணமாகவும் பொருளாகவும் 40,000 ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை தொண்டர்கள் சேகரித்துள்ளனர். தமிழ் இளைஞர் பேரவை தொண்டர்கள் நீண்ட காலத்துக்கு இச் சேவையில் ஈடுபடவுள்ளனர். இளைஞர்களது பணிக்கு வடக்கில் பேராதரவு கிடைத்து வருகிறது. உதவி வழங்கிய பல பெரியவர்கள் இளைஞர்களது சேவை நோக்கிமேலும் மேலும் உதவிகள் வழங்கத் தயாராகவுள்ளனர்.

தமிழ் இளைஞர் பேரவையின்ஸ்ரான்லி வீதி தலைமை அலுவலகம் முழு நேரமாக இயங்குவதுடன் தொண்டர்கள் தமது பெயர்களை பதிவு செய்தபோதும் அவர்களது தகுதி கணிக்கப்பட்டே அனுப்பப்பட்டு வருகின்றனர். தமிழ்இளைஞர்பேரவை பொது மக்களிடமிருந்து விளக்குகள், கோடரி, கத்தி ஆகிய பொருட்களை உடனடியாக வேண்டியுள்ளது.

—1-ம் பக்கத் தொடர்

எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்களை இதுவரை மக்கள் கேட்பதற்கு வசதி செய்துகொடுக்கவில்லையென்பது தெரிந்ததே. சட்டப்படி பிரதமருக்கு அடுத்த நிலையிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரை இவ்வாறு ஒலிபரப்புக்கூட்டுத் தாபனம் ஒதுக்கியுள்ளது.

சென்ற வார இறுதியில் ஜனாதிபதி, பிரதமர், மற்றும் அமைச்சர்கள் கிழக்கு மாகாண நிவாரணப் பணிகள் பற்றி ஆராய்வதற்காக அங்கே சென்றிருந்தார்கள். அதுவும், அரசாங்க ஆதரவு நாளேடான 'தினபதி'யின் செய்திப்படி, இவர்கள் தாமாகவே அங்கு ஓடோடிப் போகாமல்—நீதியமைச்சர் தேவநாயகம் அவர்கள் வருந்தி வருந்தி அழைத்த பின்னரே — அங்கு சென்றிருக்கின்றனர். இவர்கள் அங்கு சென்ற அதே நாட்களில் எதிர்க்கட்சித் தலைவரும் சென்றிருக்கிறார்,

ஆனால் ஜனாதிபதி, பிரதமர். அமைச்சர்கள், சபாநாயகர் ஆகியோரது விஜயம் குறித்து பேட்டிகளையும் செய்திகளை உடனுக்குடன் வானொலியின் ஒலிபரப்பிய ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், எதிர்க்கட்சித் தலைவரும் அங்கு சென்றதாக ஒரு வார்த்தைகூட தனது விமர்சனத்தில் கூறாது வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்துள்ளது. எதிர்க்கட்சித்தலைவருக்கும் சரிசம அந்தஸ்து அளிக்கிறோம் என்று அரசு வாய் ஓயாமற் கூறினாலும் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தினர் எதிர்க்கட்சித் தலைவரை இவ்வாறு இருட்டடிப்பு செய்துள்ளனர்.

இதே சமயம் கிழக்கு மாகாணப்புனரமைப்பு வேலைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அதீதமான அக்கறையும் ஈடுபாடு காட்டுவது கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரு சில நலத்தலைவர்களுக்கு அடிவயிற்றைக் கலக்குகிறதாம் 'மட்டக்களப்பு — யாழ்ப்பாணம்' என்ற பிரதேசக் கூச்சலையே தமது அரசியல் வாழ்வின் அடிஅத்திவாரமாகக் கொண்டிருக்கும் இந்தச் சுயநலக்கும்பல், இந்தத் தேசிய நெருக்கடியான வேளையிற்கூட கிழக்குடன் வடக்கு இணையவிடாது 'சகுனி' வேலைபார்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறதாம்.

அண்மையில் மட்டக்களப்புக்கு சென்று நிவாரண வேலைகளை கவனித்த மன்னார் பா. உ: சூசைதாசன், மானிப்பாய் பா. உ. தர்மலிங்கம் யாழ் பா. உ: திரு. யோகேஸ்வரன், உடுப்பிட்டி பா. உ. இராசலிங்கம், ஆகியோர் அங்கு நடைபெற்ற மாநாடொன்றில் தாமாகவே சென்று கலந்து கொண்டனர். இவர்களைக் கண்டவுடன் அங்கிருந்த அமைச்சர் ஒருவருக்கு முகம் இருண்டுபோய்விட்டதாம்,

தமிழ் மக்களுக்கு இயற்கையின் சீற்றத்தால் பேரழிவு ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடி நேரத்திற்கூட, இவ்வாறு தமது அரசியல் சுயநலத்துக்காக தமிழினத்தைப் பிரிக்க முயலும் சக்திகளை கிழக்குமாகாணத்தமிழ் மக்கள் நன்கு இனங்கண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்புக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மாணவர் சேவைக் குழு

கிழக்கிலங்கைப் புனர்வாழ்வு உதவிக்குழுவின் திட்டப்படி கிழக்குமாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்றுவதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து திரட்டப்பட்ட மாணவர் சேவைக்குழுவின் முதலாவது பிரிவு புதன்கிழமை (13-12-78) யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுகிறது. தெல்லிப்பழை, நல்லூர், சாவகச்சேரி ஆகிய இடங்களிலிருந்து திரட்டப்பட்ட மாணவர்களும், தொண்டர்களுமாக இக்குழுவில் 75பேர் அடங்குவர். விசேட பஸ் ஒன்றில் இவர்கள் பட்டிருப்புக்குசென்று அங்கு சேவையில் ஒருவாரகாலத்துக்கு ஈடுபடுவார்கள்.

மூன்று லொறிகளில் கிடுகுகளையும் மற்றும் வீடுவேய்வதற்கு வேண்டிய உபகரணங்களையும் இங்கிருந்து கொண்டுசெல்வதற்கு மேற்படி குழு முடிவுசெய்துள்ளது. இந்தக் கிடுகுகளைக் கொண்டு பட்டிருப்புத் தொகுதியில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்குத் தொண்டர்கள் வேய்ந்து கொடுப்பார்கள். இவர்களதுஉணவு, மருத்துவவசதிகளை குழு கவனித்துக்கொள்ளும். இவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்கள் இங்கிருந்தே எடுத்துச்செல்லப்படும். இவர்களுடன் கூட ஒரு டாக்டரும் செல்வார். கிடுகு லொறிகளுக்கு பொறுப்பாக திரு. ஏ. கே. ராமலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதன்கிழமை கொழும்பிலிருந்து மட்டக்களப்பு செல்லும் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கமும் கூட்டணித்தலைவர் திரு. சிவசிதம்பரமும், சேவைக்குழுவின் பணிகளை பட்டிருப்புத்தொகுதியில் தொடக்கி வைப்பார்கள்.

இவர்களது ஒருவார சேவை முடிவடைந்தவுடன் இரண்டாவது குழு யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும்.





திருப்திகரமான சலவைக்கு மில்க்வைற் நீலசோப் வாங்கி உபயோகியுங்கள்

மில்க்வைற் நீல சோப் புதுப் பொலிவுடன் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது. மேலுறைகளை அனுப்பி பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற்-யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org